19.11.2025

அ.வ.எண். 119/2021

பி.சா.1 – வெங்கடேஷ், த/ப.நடேசன்

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 19.11.2025 is accordance with the provision of Act X of 3331

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. வாதி எந்த சொத்துக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியும். வழக்கானது சூலூர் கிராம க.ச.எண்.265/1, 0.71 சென்ட்டுக்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சர்வே எண் சரியானது, விஸ்தீரணம் தெரியவில்லை. தாவா சொத்திற்கு தென்புறமாக ஒரு கிணறும், வடபுறமாக ஒரு கிணறும் ஏற்கனவே உள்ளது என்றால் சரிதான். வடபுறத்தில் உள்ள கிணறு குடிநீர் பயன்பாடு மற்றும் விவசாயப் பயன்பாட்டிற்கு உபயோகப்படுத்தப்படவில்லை என்றால் அதில் இருந்து மோட்டார் திருடு போய்விட்டது. அதில் இருந்து உபயோகப்படுத்தவில்லை. 50 வருடங்களுக்கு முன்பிருந்தே வடபுறம் உள்ள கிணறானது உபயோகத்தில் இல்லை என்றால் எனக்கு தெரியவில்லை. எனக்கு கிரயம் கொடுத்தவர் மோட்டார் உள்ளதாக சொன்னார்.

2. தாவா சொத்து வாதிகளுக்கு அவர்களது தாத்தா அருணாச்சல தேவர் மூலம் பாத்தியப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியும். 1956 ல் அருணாச்சல தேவர் தாவா சொத்தை கிரயம் பெற்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் முழுமையாக தெரியவில்லை. தாத்தா சொத்து வாதிக்கு வந்தது. வழக்கு தாக்கல் செய்த போது தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களை பரிசீலனை செய்து பார்த்தேனா என்றால் ஆமாம். தாவா சொத்தில் உள்ள பொதுவழித்தடத்தை நான் உபயோகப்படுத்த விடாமல் இடையூறு செய்து வருகிறேன் என்றால் அவ்வாறு தடம் இல்லை, நான் தடத்தை அடைக்கவில்லை.

3. அருணாச்சல தேவர் யாரிடம் இருந்து சொத்தை கிரயம் பெற்றார் என்றால் தெரியும், நாராயண ஐயரிடமிருந்து வாங்கினார். நாராயண ஐயர் மறைவிற்கு பின்னிட்டு அவரது வாரிசுகளான மனைவி மற்றும் மகன்கள், குமார தேவர் மகன் கந்தசாமி என்பவருக்கு 1977 ல் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தின் ஒருபகுதியை

கிரயம் எழுதி கொடுத்த விவரம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அதன் விஸ்தீரணம் 50 சென்ட் ஆகும். மேற்படி 50 சென்ட் ஆனது புல எண்.265/1 ல் அமைந்துள்ளது என்றால் சரிதான். புல எண்.265/2 காலையில், நான் வாங்கிய பூமி இல்லை. புல எண்.265/2 காலையில் நாராயண ஐயரின் வாரிசுகளுக்கு எவ்வளவு சொத்து உள்ளது என்றும், அதில் கிணறு உள்ளதா என்றும், அதில் எவ்வளவு பாசன உரிமை உள்ளது என்று தெரியுமா என்றால் புல எண்.265/2 காலையில் நாராயண ஐயரின் வாரிசுகளுக்கு எவ்வளவு சொத்து உள்ளது என்று தெரியாது. அதில் கிணறு உள்ளது. பாசன உரிமை உள்ளது. அதன் பாகம் தெரியாது.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

மேலும் குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்கு வேண்டி ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur